सत्यमेव जयते

## புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

# டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள்

ஆற்றிய

73வது

# குடியரசு தின உரை

26, சனவரி 2022



மாண்புமிகு **துணைநிலை ஆளுநர்** அவர்களின்

# குடியரசு தின உரை - 2022

***எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய புதுச்சேரி வாழ் மக்களே!***

> *"எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி*
> *எங்கும் வெற்றி எதிலும் வெற்றி"*

என்று வெற்றியோடு இந்தியத் திருநாட்டின் 73-வது குடியரசு தின விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த இனிய வேளையில் புதுச்சேரி மக்களுக்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நாளில், இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை உருவாக்கிக் கொடுத்த நமது தேசியத் தலைவர்களை நினைத்துப் போற்றுவதும், அரசியலமைப்புச் சாசனம் வகுத்துக் கொடுத்த மாண்புகளையும் கோட்பாடுகளையும் பேணிக்காப்பதும் நம்முடைய தலையாய கடமை ஆகும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, 2050-ல் உலகின் பொருளாதார வல்லரசு நாடுகளில் ஒன்றாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் நாடாக மட்டுமல்லாமல் மரபுகளையும் மாண்புகளையும் போற்றுகின்ற நாடாகவும் இந்தியா திகழ்கிறது.

இந்தியா இன்று கலாச்சாரத்தில் மட்டுமல்லாமல் அறிவியல் ஆராய்ச்சித் துறையிலும் முன்னோடி நாடாக உலக அரங்கில் பீடுநடை போட்டுவருகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமரின் "தற்சார்பு இந்தியா" (ஆத்மநிர்பர் பாரத்) இயக்கத்தின்கீழ் உள்நாட்டில் தயாரான தடுப்பூசிகள் 160 கோடிக்கும் மேல் செலுத்தப்பட்டிருக்கிறது. உலகின் மிகப் பெரிய இயக்கமாக தடுப்பூசி இயக்கத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய இந்தியாவின் செயல்திறம் உலகநாடுகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. அதுமட்டுமல்லாமல் நமது நாட்டில் தயாரான தடுப்பூசி 90-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இது பெருமைக்குரிய ஒன்றாகும்.

கோவிட்-19 பெருந்தொற்று உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதோடு சமூக, பொருளாதாரச் சூழலையும் பெரிதும் பாதித்திருக்கிறது என்றாலும், தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதலில், நெருக்கடியான பெருந்தொற்றுச் சூழலில் இருந்து இந்தியா மீண்டெழுந்திருக்கிறது.

*“காண்டீவமேந்தி உலகினை வென்றது*
*கல்லொத்த தோள் எவர் தோள்”*

என்ற பாரதியின் பாடலுக்கு ஏற்ப, கோவிட்-19 நெருக்கடி காலத்திலும் பொருளாதாரச் சரிவு இல்லாமல் செயல்பட்ட மிகச் சில மாநிலங்களில் புதுச்சேரி மாநிலமும் ஒன்று என்பதை இந்த நேரத்தில் பெருமையோடுத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு,

*“இன்னல் வந்திற்றுடும் போததற்கஞ்சோம்*
*ஏழையராகி இனி மண்ணிற் துஞ்சோம்”*

என்று பாரதி கூறியதற்கு ஏற்ப மக்களின் பொருளாதார வாழ்வியல் பாதிக்கப்படாத வகையில் தளர்வுகளுடன் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மக்களின் ஒத்துழைப்போடும் பேராதரவோடும் கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டது. அதற்காக புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுச்சேரியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும் அயராது பணியாற்றிய மருத்துவப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள், காவல் துறையினர், சமூக நலனில் அக்கறை கொண்டு முன்வந்து சேவையாற்றிய அனைவருக்கும் புதுச்சேரி மக்களின் சார்பில் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, அரசின் செயல்பாடுகளையும்

நடவடிக்கைகளையும் உடனுக்குடன் எடுத்துக்கூறி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களைப் பாராட்டுகிறேன்.

தேசிய அளவில் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் மாநிலங்களில் ஒன்றாக புதுச்சேரி இருந்துவருகிறது. 2021-ஆம் ஆண்டில், பொது நிர்வாகக் குறியீடுகளின் அடிப்படையில் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் யூனியன் பிரதேசமாக புதுச்சேரி அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுகாதாரம், கல்வி, சமூகநலத் துறைகளிலும் புதுச்சேரி முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இந்த சிறப்புகளோடு, மகான் ஸ்ரீஅரவிந்தரின் 150-வது பிறந்த ஆண்டையும், மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு நினைவு ஆண்டையும் கொண்டாடும் வகையில் 25-வது தேசிய இளைஞர் விழாவை நடத்தும் வாய்ப்பை மத்திய அரசு புதுச்சேரிக்கு வழங்கியது. இந்த பெருமைக்குரிய நிகழ்வுக்காக, பாரதப் பிரதமருக்கு புதுச்சேரி மக்கள் சார்பில் நன்றியை பதிவு செய்கிறேன்.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசாகச் செயல்படும் புதுச்சேரி அரசு, கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் வேளாண்மைத்துறை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு புதுச்சேரி அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருகிறது. பயிர் உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்கீழ் நெல்சாகுபடி செய்யும் 12,138 விவசாயிகளுக்கு ₹ 11.91 கோடியும், கரும்பு விவசாயிகளுக்கு ₹ 2.05 கோடியும் பருத்தி விவசாயிகளுக்கு ₹ 1.4 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமரின் விவசாயிகள் நிதியுதவித் (பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி) திட்டத்தின்கீழ் விவசாய நிலம் உள்ள குடும்பங்களுக்கு ஆண்டிற்கு ₹ 6,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுவரை, 11,187 விவசாயிகள் இதன்மூலம் பயன் அடைந்திருக்கிறார்கள்.

*"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்"* என்று பாரதி தெரிவித்ததைப்போல, மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் அரசு பல வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளைச் சேர்ந்த 18,199 மீனவக் குடும்பங்களுக்கு மீன் பிடி தடைக்கால நிவாரணமாக குடும்பம் ஒன்றுக்கு ₹ 5,500 வீதம் ₹ 10 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீன் பிடிக்கும்போது உயிரிழந்த ஆறு மீனவர்களின் வாரிசுகளுக்கு இறப்பு நிவாரணமாக ₹ 2 இலட்சம் வீதம் ₹ 12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பாரதப் பிரதமர் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (பிரதான் மந்திரி மட்சிய சம்பத யோஜனா)

வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து உதவித் திட்டத்தின்கீழ் சுமார் 21,371 பயனாளிகளுக்கு ₹ 4,500 வீதம் ₹ 9.61 கோடி அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நடப்பு நிதியாண்டில் அட்டவணை இனத்தவர் துணைத் திட்டத்தின்கீழ் ₹ 165.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பான முறையில் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் மற்றும் பாரத் ரத்னா ராஜீவ்காந்தி வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக கடந்த நிதியாண்டில், ₹ 16.57 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இதனால், 1,707 பயனாளிகள் பயனடைந்தனர். நடப்பு நிதியாண்டில் இதுவரை 177 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெற்றோர்களுக்கு தங்களின் முதல் இரண்டு பெண்களுக்கு திருமணம் செய்ய ஒவ்வொருவருக்கும் ₹ 75,000 வீதம் திருமண நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வகையில், தீண்டாமை மறுப்பு திருமணத்திற்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை நடப்பு நிதியாண்டில் 226 தம்பதிகளுக்கு ₹ 562 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொடர் நோயினால் பாதிக்கப்பட்டு நீண்ட

நாட்களாக வேலைக்குச் செல்ல முடியாத, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மூலம் நடப்பு நிதியாண்டில் இதுவரை 1,555 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

இந்திய சுதந்திரத்தின் 75-வது பெருவிழா ஆண்டினை கொண்டாடும் விதமாக (ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) மத்திய கலாச்சார அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி தொடர் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலமாக புதுச்சேரியில் உள்ள கலைஞர்கள் மற்றும் அறிஞர்களை அரசு கௌரவித்து வருகிறது. மேலும், நலிவுற்ற நிலையில் உள்ள மூத்த கலைஞர்கள் மற்றும் அறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறது. தொழில் நிறுவனங்களுக்கான சேவை மையம் நிறுவப்பட்டு அதன் மூலம் சிறு, குறுதொழில் நிறுவனங்களின் பணப்பரிமாற்றம் காலதாமதம் இன்றி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெண்களுக்கான சமூக, பொருளாதார பாதுகாப்பினை ஏற்படுத்தித் தருவதில் அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது. பெண்கள் எளிதில் ஓட்டுனர் உரிமம்/பழகுநர் உரிமம் பெற ஏதுவாக, போக்குவரத்துத் துறையின் மூலம் ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும்,

பெண்கள் பொதுப் போக்குவரத்தில் பாதுகாப்பாக பயணிப்பதற்கு உதவியாக "வாகன இயக்க கண்காணிப்பு மையம்" ஒன்று போக்குவரத்துத்துறை வளாகத்தில் ₹ 4.60 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது. இதற்கான நிதி பெண்கள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் "நிர்பயா" திட்டத்தின்கீழ் பெறப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் மற்றும் நலிவடைந்த வகுப்பினரின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகள், எல்லோரையும்போல் சமமான வாய்ப்புகளைப் பெறும் வகையில் சிறப்பான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. புதுச்சேரி மாநிலத்தில் 20,128 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

மாற்றுத்திறனாளிகள் திருமண நிதியுதவித் திட்டம், எரிபொருள் மானியத் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான, கடந்த டிசம்பர் மாதம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் 400 மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர். வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சிறுபான்மை, இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த மாணவ–மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக 1,000 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை /ஊக்கத்தொகையாக ₹ 21 இலட்சம் புதுச்சேரி வக்ஃபு வாரியம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவியருக்கான தங்கும் விடுதிகள் புதுச்சேரியில் மூன்றும், காரைக்காலில் இரண்டும், ஏனாமில் ஒரு மாணவர் விடுதியும் ₹ 231.71 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவ-மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 1,316 மாணவ-மாணவிகளுக்கு ₹ 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ-மாணவிகளுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான படிப்பு உதவித் திட்டத்தின்கீழ் 44 மாணவ-மாணவியருக்கு ₹ 9 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் மூலமாக பாரதப் பிரதமரின் தாய்மார்கள் ஆராதனை (பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா) திட்டத்தின்கீழ் ₹ 5 ஆயிரம்

உதவித்தொகை கருவுற்ற பெண்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. இதுவரை 4,039 பயனாளிகளுக்கு ₹ 2.48 கோடி வழங்கப்பட்டுள்ளது. வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உணவு, உடை மற்றும் தங்குமிடம் அளிக்கும் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அனைத்துவிதமான உடனடி தீர்வுகளும் அளிக்கப்பட்டு வருகிறது. “போக்சோ” சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு ₹ 9.31 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றால் பெற்றோர்களை இழந்த 11 குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 378 குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களின் மறுவாழ்விற்கு தேவையான உணவு, இருப்பிடம் மற்றும் கல்வி ஆகியவை தொடர்ச்சியாக கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு பிரதம மந்திரி பாதுகாப்பு நிதி ₹ 10 இலட்சம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டப் (அந்தியோதயா அன்ன யோஜனா)

பயனாளிகள் குடும்பத்திற்கு ₹ 1,174.95 மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து சிவப்பு அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அரிசிக்கான மானியத் தொகையை அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ₹ 12.05 கோடி மாதந்தோறும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1.78 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் மாதந்தோறும் பயனடைகிறார்கள். கோவிட்-19 நிவாரணமாக பாரதப் பிரதமர் குடிமைப்பொருள் வழங்கல் (பிரதான் மந்திரி கரீப் கல்யான் அன்ன யோஜனா) திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழங்கிய உணவு தானியம் தகுதியுடைய 1.78 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் நிலுவைத்தொகை ₹ 32 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரியில் இயங்கி வரும் பாண்டெக்ஸ், பான்ஃபேப் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 46.31 இலட்சம் மற்றும் நெசவாளர்கள் நலத் திட்டத்தின்கீழ் ₹ 45.45 இலட்சம் நிதிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை சூப்பர் மார்க்கெட்டுகளாக தரம் உயர்த்த தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடம் நிதி உதவி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. புதுவை கூட்டுறவு கட்டிட மையத்தின் மூலமாக, பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டப் (பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா) பயனாளிகளுக்கு மணல் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக, மணமேடு தென்பெண்ணை ஆற்றில் குவாரியை பயன்படுத்த வருவாய்த் துறைக்கு உரிமத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தும் நோக்கத்தோடு தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியானது வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு, சமூகப் பொருளாதார முன்னேற்றத்தையும் விரைவுபடுத்தும். படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் தொழிற்கூடங்களில் பயிற்சி அளித்து பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற புதுச்சேரி மாவட்டத் தொழில் மையம் வழிவகை செய்கிறது.

*“ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்*

*ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்”*

என்றார் பாரதி. அதற்கேற்ப, படித்த இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்க மானியத்துடன் வங்கிக்கடன் பெறவும் உதவி வழங்கப்படுகிறது. புதிய தொழில் முனைவோருக்குத் தேவையான அனுமதி விரைவாக கிடைக்க, தொழில் வழிகாட்டி குழுமத்தின் மூலமாக ஒத்துழைப்பு நல்கி வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டில் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின்கீழ், 50 தொழில் முனைவோர்களுக்கு ₹ 105.49 இலட்சம் மானியத்துடன் ₹ 324.38 இலட்சம் வங்கிக்கடன் வழங்கப்பட்டது. மேலும், பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின்கீழ் 76,774 பயனாளிகளுக்கு ₹ 399.95 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் கிராமப்புற பகுதிகளில் பெருகி வரும் மின்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக, தீனதயாள் உபாத்யாயா கிராமப்புற மின்வசதித் (தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா) திட்டத்தின் மூலம் மின்கட்டமைப்புகளை மேம்படுத்த ₹ 20.05 கோடி செலவில் திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு மறுசீரமைக்கப்பட்ட மின்விநியோக திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் அனைத்து மின் நுகர்வோருக்கும் தடையற்ற, தரமான மின் விநியோகம் உறுதிசெய்யப்படும். பழைய மின்கடத்திகளை மாற்றுவது, புதிய மின்மாற்றிகளை நிறுவுவது, மேல்நிலை தெருமின் இணைப்புகளை புதைமின்வடமாக மாற்றி அமைப்பது, துணை மின்நிலையங்களை புனரமைத்து நவீனமயமாக்குவது உள்ளிட்ட பல்வேறு பணிகள் இந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இயற்கையில் கிடைக்கும் சூரிய ஒளி மற்றும் காற்றைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முறையை புதுச்சேரி புதுப்பிக்க வல்ல எரிசக்தி முகமை செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் பல ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் மாசற்ற மாநிலமாக புதுச்சேரியை மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதிகரித்து வரும் எரிசக்தித் தேவையை சூரியமின்சக்தி உற்பத்தி மூலம் சீரான முறையில் பூர்த்தி செய்ய மத்திய அரசுடன் இணைந்து பல்வேறு திட்டங்களை புதுச்சேரி அரசு செயல்படுத்தி

வருகிறது. இதுவரை 860 கிலோவாட் திறன் கொண்ட சூரியசக்தி உற்பத்தி நிலையங்கள் புதுச்சேரி இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ராஜீவ்காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, ராஜீவ்காந்தி கால்நடை கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மகாத்மாகாந்தி முதுநிலை பல்மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் ஆகிய அரசு கட்டிடங்களில் நிறுவப்பட்டுள்ளது. சுற்றுலாத் தளங்களில் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்காக 100 சூரியஒளி LED தெருவிளக்குகள் புதுச்சேரி சுற்றுலாத் தளங்களில் நிறுவப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசுதுறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு பாராட்டுக்குரியது. கொரோனாவை கட்டுப்படுத்தும் பணிக்காக ₹ 15.57 கோடி புதுச்சேரி பேரிடர் மீட்பு நிதி மூலமாக ஒதுக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ₹ 7.65 கோடி இழப்பீடு வழங்கப்பட்டது.

புதுச்சேரி மாநிலத்தில் சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ் வழங்கும் முறையினை எளிமைப்படுத்தி வருவாய்த்துறை மூலம் வாரிசு சான்றிதழ் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட சிரமம், தாமதம் ஆகியவற்றை தவிர்த்து நீதித்துறையின் சுமையும் கணிசமாக குறைக்கப்பட்டிருக்கிறது. பேரிடர் காலத்தில் தேடுதல் மற்றும் துயர் நீக்க நடவடிக்கைகள் சிறப்பாகவும் தங்குதடையின்றியும் மேற்கொள்ள அவ்வப்போது தேசிய பேரிடர் மீட்புப்படை துணையுடன் பயிற்சிகள் நடத்தப்பட்டன. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் கடந்த வடகிழக்கு பருவமழைக் காலத்தில் பேரிடர் மேலாண்மை சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டனர்.

கோவிட் சூழல் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கின்ற போதிலும், மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை அளித்திருக்கிறது. அதன் பின்னணியில், புதுச்சேரி மாநிலத்தில் சுகாதார மற்றும் மருத்துவக் கட்டமைப்புகள் பெருமளவில் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

புதுச்சேரியில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலாக் கட்டமைப்புகளை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதற்காக சாலைவசதி, இரயில் பாதை,

படகு மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதுச்சேரி விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான பணிகள் விரைவுபடுத்தப் பட்டுள்ளது. புதுச்சேரியில் ஆன்மிகச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா மற்றும் இயற்கைச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான அம்சங்களுடன் ஐந்து கடற்கரைப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

புதுச்சேரி, வில்லியனூர் “சுடுமண் பொம்மைகள்” மற்றும் திருக்கனூர் காகித பொம்மைகளுக்கு “புவிசார் குறியீடு” வழங்கப்பட்டிருப்பது புதுச்சேரிக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்திருக்கிறது.

புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்த மத்திய அரசின் “சாகர்மாலா” திட்டத்தின்கீழ் 7.3 இலட்சம் கனமீட்டர் மணலை தூர்வாரி ஆழப்படுத்தும் பணி தொடங்கப்பட்டது. இதன்மூலம் தூர்வாரப்பட்ட மணல் புதுச்சேரி கடற்கரையோரம் கொட்டப்பட்டது. இதனால் புதுச்சேரியில் மணற்பாங்கான அழகிய கடற்கரை உருவாகியுள்ளது. புதுச்சேரி சுண்ணாம்பாற்றையும் காரைக்கால் அரசலாற்றையும் சுத்தப்படுத்துவதற்கான செயல்திட்டத்தை புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் தயாரித்து செயல்படுத்தி வருகிறது.

*“காவியஞ் செய்வோம் நல்ல காடுகளை வளர்ப்போம்”* என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப, 75-வது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி புதுச்சேரி மாநிலத்தின் பசுமைச் சூழலை மேம்படுத்த மாநிலம் முழுவதும் 75,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

புதுச்சேரி மாநிலத்தில் வழங்கப்படும் தொழில்நுட்பக் கல்வியை உலகத்தரத்திற்கு உயர்த்தும் முயற்சியான முதலாவது மாநில பல்கலைக்கழகமாக புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய அரும் பெரும் முன்னேற்றங்களையும் சாதனைகளையும் புரிந்துவரும் புதுச்சேரி அரசு மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மத்திய அரசின் மேலான ஒத்துழைப்பும் மக்களின் ஒத்துழைப்பும் மேம்பட்டு இந்த அரசு மேலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்லும் என்பதில் ஐயமில்லை.

என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பாக, புதுச்சேரி மக்களுக்கு என் அன்பான வேண்டுகோள்:

✳ கோவிட்-19 நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு மக்கள் தங்களது ஆதரவை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

✳ அனைவரும் தவறாமல் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுங்கள்.

* தவறாமல் முகக்கவசம் அணியுங்கள்.
* சமூக / தனிமனித இடைவெளியைக் கடைப்பிடியுங்கள். மேலும்,
* தூய்மைப் பழக்கங்களை பின்பற்றுங்கள்.

மக்களின் முழுமையான ஒத்துழைப்போடு இந்த பெருந்தொற்றுச் சூழலில் இருந்து நாம் விரைவில் விடுபட முடியும் என்று நம்புகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளில் புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது குடியரசு தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர் விலை – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் ...”

***நன்றி ! வணக்கம் !!***

***ஜெய் ஹிந்த் !!!***

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.